யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 12 (2021) | விவசாய விஞ்ஞானம் - 2

பெயர் / சுட்டெண் : ..... திரு.ர.யாழினி B.Sc (Hons), PGDE

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

1) பயிர்செய் நிலம் ஒன்றிற்கு பம்பி ஒன்றிலிருந்து வழங்கப்பட்ட நீரின் அளவு 1000ℓ கொண்டு செல்லல் வினைத்திறன் 75% எனில் பயிர் நிலத்தை அடைந்த நீரின் அளவு,

1) 750ℓ 2) 1000ℓ 3) 1250ℓ 4) 1500ℓ 5) 1750ℓ

2) மண்ணில் காணப்படும் கூறுகள் கீழே தரப்பட்டுள்ளன

A - உக்கிகொண்டிருக்கும் சேதனப் பொருட்கள்
B - Ca^{2+}
C - Na^{+}
D - Fe^{2+}
E - எச்ச மண்

மண் கட்டமைப்பை விருத்தியாக்குவதில் பங்களிப்பு செய்யும் காரணிகள்,

1) A, B, C, D *2)* B, C, D, E *3)* C, D, E, A *4)* D, E, A, B *5)* A, E, B, C

3) கரும்பு, கறுவா, இறப்பர், மிளகு, தென்னை ஆகிய பயிர்களின் ஆராய்ச்சி நிலையங்கள் அமைந்துள்ள இடங்கள் முறையே,

1) செவனகல, மாத்தளை, லுனுவில, அகலவத்தை, மெல்சிரிபுர
2) அகலவத்தை, கம்புறுபிட்டிய, மாத்தளை, தலவாக்கலை, போம்புவல
3) உடவலவை, கம்புருபிட்டிய, மாத்தளை, அகலவத்தை, லுனுவில
4) உடவலவை, கம்புருபிட்டிய, அகலவத்தை, ரத்தினபுரி, லுனுவில
5) உடவலவை, கம்புருபிட்டிய, அகலவத்தை, மாத்தளை, லுனுவில

4) யாதேனும் பிரதேசத்தின் வானிலை என்பதை வரைவிலக்கணப்படுத்துவதற்கு மிகப்பொருத்தமான கூற்று,

1) ஒரு மணி நேரத்துள் அப்பிரதேச வளிமண்டலத்தில் காணப்படும் தன்மைகளின் வேறுபாடுகள்
2) ஒரு நாளில் அப்பிரதேச வளிமண்டலத்தில் காணப்படும் தன்மைகளின் வேறுபாடுகள்
3) ஒருவார காலத்துள் அப்பிரதேச வளிமண்டலத்தில் காணப்படும் தன்மைகளின் வேறுபாடுகள்

www.ikedu.lk

4) ஒருமாத காலத்துள் அப்பிரதேச வளிமண்டலத்தில் காணப்படும் தன்மைகளின் வேறுபாடுகள்
5) நீண்டகால ரீதியில் அப்பிரதேச வளிமண்டலத்தில் காணப்படும் தன்மைகளின் வேறுபாடுகள்

5) மண் அரிப்பு தொடர்பான சில வாக்கியங்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுள் சரியான கூற்று,

1) நீரரிபள்ள அரிப்பு தொடர்ந்தும் நிகழுவதால் சால் அரிப்பு ஏற்படும்

2) படையரிப்பானது மண்ணரிப்பின் ஆரம்பக் கட்டமாகும்

3) நரீ ரிபள்ள அரிபப் தொடர்நது ம் நிகழுவதால் படையரிபப் ஏறப் டும்

4) சால் அரிப்பு தொடர்ந்தும் நிகழுவதால் படையரிப்பு ஏற்படும்

5) சால் அரிப்பின்போது நிலத்தில் பாரிய சால்கள் தோன்றும்

6) ஒரு குறித்த மண்ணில் திண்மப்பொருள் அடக்கம் $5cm^3$ உம் நீரடக்கம் $2cm^3$ உம் மொத்தக் கனவளவு *8* cm^3 உம் ஆயின், அம்மண்ணின் நுண்டுளைத்தன்மை,

1) 25% 2) 37.5 % 3) 62.5 % 4) 75% 5) 87.5%

- 7 ஆம் 8 ஆம் வினாக்கள் பின்வரும் அட்டவணையுடன் தொடர்புடையவை.
ஈர - உலர் குமிழ் வெப்பமானி மூலம் சாரீரப்பதனைக் கணிப்பதற்காகப் பயன்படும் அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது.

வெப்பநிலை வேறுபாடு °C / உலர் குமிழின் வெப்பநிலை வாசிப்பு °C	*0.5*	*1.0*	*1.5*	*2.0*	*2.5*	*3.0*
30	*96*	*93*	*89*	*85*	*82*	*78*
29	*96*	*92*	*89*	*85*	*81*	*78*
28	*96*	*92*	*88*	*85*	*81*	*77*
27	*96*	*92*	*88*	*84*	*81*	*77*
26	*96*	*92*	*88*	*84*	*80*	*76*

7) A எனும் இடத்தில் உலர் குமிழ் வெப்பமானியின் வெப்பநிலை *29*^{0}C உம், ஈரக்குமிழ் வெப்பமானியின் வெப்பநிலை *26*^{0}C உம் ஆயின், அந்த இடத்தின் சாரீரப்பதன்,

1) 78% 2) 81% 3) 85% (4) 88% 5) 96%

8) B எனும் இடத்தில் உலர் குமிழ் வெப்பமானியின் வெப்பநிலை 28^0C உம் ஈரக்குமிழ் வெப்பமானியின் வெப்பநிலை 27^0C உம் ஆயின் மேற்படி வினாவில் A எனும் இடத்துக்குச் சார்பாக B எனும் இடத்தின் சாரீரப்பதன்,

1) சமமானது 2) குறைவானது 3) உயர்வானது

4) முதலில் அதிகரித்து பின்பு குறையும் 5) குறைவடைந்து பின் அதிகரிக்கும்

www.kedu.lk

9) 100 கிராம் உலர் மண்ணின் தோற்ற அடர்த்தி $2.65 gcm^{-3}$ ஆயின் அம் மணலில் அடங்கியுள்ள துணிக்கைகளின் கனவளவு,

1) $0.265\ cm^3$ 2) $2.65\ cm^3$ 3) $3.77\ cm^3$ 4) $26.5\ cm^3$ 5) $37.7\ cm^3$

10) மண் இழையமைப்பைத் துணிவதற்குரிய நீரமானி *(*Hydrometer*)* முறையின் போது அமோனியமைதரொட்சைட்டும் ஐதரசன்பேரொட்சைட்டும் சேர்ப்பதன் நோக்கங்கள் முறையே,

1) சேதனப் பொருட்களை நீக்குதல், மண்ணீரை அகற்றுதல்
2) சேதனப் பொருள்களை நீக்குதல், மண்ணின் pH பெறுமானத்தை அதிகரித்தல்
3) பிணைப்புக் காரணிகளை உடைத்தல், சேதனப் பொருள்களை நீக்குதல்
4) மண்ணீரை அகற்றுதல், மண் அமைப்பை விருத்தி செய்தல்
5) மண் pH பெறுமானத்தை அதிகரித்தல், மண்ணீரை அகற்றுதல்

11) SALT என்பது,

1) மண்ணின் உவர்த்தன்மையைச் சோதிக்கும் முறை
2) ஒரு மண்காப்பு முறை
3) மண்ணின் பௌதிக இயல்புகளை அளக்கும் ஒரு தொழினுட்ப முறை
4) சதுப்பு நிலப் பிரதேசம்
5) விவசாய நிலங்களில் விளைதிறனை அளக்கும் ஒரு முறை

12) பசளைக் கலவைகள் பற்றிய சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பசளைக் கலவைகளைத் தாவரங்களுக்கு இடுவதால் தாவரத்துக்குத் தேவையான போசணைகள் யாவும் உரிய அளவுகளில் கிடைக்கும்.

B - பசளைக் கலவைகளின் விலை சார்பளவில் உயர்வானது.

C - சமனிலையான பசளைக் கலவையில் பிரதான போசணைகள் மூன்று அடங்கியிருக்கும்.

இவற்றுள் சரியான கூற்று / கூற்றுக்கள்,

1) A மாத்திரம் *2)* B மாத்திரம் *3)* A, D மாத்திரம்
4) A, C மாத்திரம் *5)* B, C மாத்திரம்

13) 5 - 15 - 15 வகைப் பசளைக் கலவையொன்றின் *1000* kg ஐத் தயாரிப்பதற்கு தேவையான யூரியா கிலோ கிராம் இல்,

1) 110 *2) 210* *3) 230* *4) 420* *5) 460*

14) சிறந்த கூட்டெரு மாதிரியொன்றின் இயல்புகள்,

1) கருமை நிறமானது, இலேசானது
2) மஞ்சள் நிறமானது, பாரமானது
3) கபிலநிறமானது, பாரமானது
4) மஞ்சள் நிறமானது, இலேசானது
5) கறுப்பு நிறமானது, பாரமானது

www.ikedu.lk

15) பூச்சியப் பண்படுத்தல் தொடர்பான சில கூற்றுக்கள் வருமாறு.

A - ஆரம்பப் பண்படுத்தல் இதில் இடம்பெறாது.
B - இரண்டாம் நிலைப்பண்படுத்தலானது, பயிர் நாட்டப்படும் வரிசை, அல்லது இடத்துக்கு மட்டும் வரையறுக்கப்படும்.
C – வித்துக்களை விதைப்பதற்கு முன்னர் நீண்ட செயற்படுகாலம் கொண்ட சர்வ களை நாசினிகள் பிரயோகிக்கப்படும்.
D – வித்துக்கள் முளைத்த பின்னர் குறுகிய செயற்படுகாலம் கொண்ட தேர்வுக்களை நாசினிகள் பிரயோகிக்கப்படும்.

மேற்படி கூற்றுக்களில் உண்மையானவை,
1) A, B என்பன மட்டும் *2)* A,C என்பன மட்டும் *3)* A, D என்பன மட்டும்

4) B, C என்பன மட்டும் *5)* C, D என்பன மட்டும்

16) "ஹோ" உபகரண மூலம் செய்யப்படுவது,

1) நெற்செய்கையில் களைகளைக் கட்டுப்படுத்துதல்.
2) மேட்டு நிலப்பயிர்ச்செய்கையில் களைகளைக் கட்டுப்படுத்துதல்.
3) நெற்செய்கையின் போது பசளையை மண்ணுடன் கலத்தல்.
4) ஆரம்ப நிலப்பண்படுத்தலின் போது மண்ணை இளக்குவதற்கு.
5) இரண்டாம் நிலைப் பண்படுத்தலின் போது மண்ணைப் புரட்டுதல்.

17) உயர் நாற்றுமேடையொன்றில் வித்துக்களை இடுவதற்கு முன்னர் இடம்பெறும் செயற்பாடுகளில் சில வருமாறு:

A - நாற்றுமேடை ஊடகத்தை இறுக்கமாக்கி மட்டப்படுத்தல்
B - வித்துக்களுக்கான சிகிச்சையளித்தல்
C - நாற்றுமேடையைத் தொற்றுநீக்கல்
D - வித்துக்களை வரிசையில் நடுதல் அல்லது விதைத்தல்
E - மெல்லிய வைக்கோல் படையொன்றை இடுதல்

மேற்படி செயற்பாடுகள் இடம்பெற வேண்டிய படிமுறை ஒழுங்கு,

1) A , B, C , D , E 2) C , B , A , D , E 3) B , A , C , D , E

4) C , B , A , D , E 5) A , B ,D , E , C

18) நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்காக நீர்ப்பம்பிகளைப் பயன்படுத்தல் தொடர்பான சில கூற்றுக்கள் வருமாறு.

A- மீள் இடப்பெயர்ச்சி பம்பியில் ஒவ்வொரு அடிப்புக்கும் சமமான அளவு நீர் வெளியாகும்.
B- மைய நீக்க விசை நீர்ப்பம்பிகள் மூலம் தொடர்ச்சியாக சீராக நீர் வெளியேற்றப்படும்.
C- மீள் இடப்பெயர்ச்சி பம்பிகளின் மூலம் சேறு கொண்ட நீரையும் வெளியேற்றக் கூடியதாய் இருக்கும்.
மேற்படி கூற்றுக்களில் சரியானவை,
1) A மட்டும் *2)* A, B என்பன மட்டும் *3)* A, C என்பன மட்டும் *4)* B, C என்பன மட்டும் *5)* A, B, C எல்லாம்

www.lkedu.lk

19) சோளப்பயிருக்கான நீர்ப்பாசனத் தேவையளவை அறிவதற்கான சில தரவுகள் வருமாறு.

- வேர்த் தொகுதியின் ஆழம் 10cm
- மண்ணின் தோற்ற அடர்த்தி $1.29cm^3$
- நீர்ப்பாசனங் கொள்ளும் சந்தர்பத்தில் மண்ணின் ஈரலிப்புச் சதவீதம் 10%
- வெளிக்களக் கொள்திறனில் ஈரப்லிப்புச் சதவீதம் 20%

மேற்படி தரவுகளின் அடிப்படையில் சோளப்பயிரின் நீர்ப்பாசனத் தேவை,

1) 1 cm 2) 1.2 cm 3) 10 cm 4) 12cm 5) 120 cm

20) குறிப்பிட்ட நீர்ப்பாசன முறையின் மூலம், நீர்நிலையொன்றிலிருந்து 4000l நீர் வெளியேற்றப்பட்டிருந்தது. தரைக்கு நீரைக் கொண்டுசெல்லும் வினைத்திறன் 70% ஆகும் எனின் பயிர்நிலத்தினால் பெறப்பட்ட நீரின் அளவானது,

1) 2500 / 2) 2800 / 3) 3000 / 4) 3200 / 5) 3500 /

www.lkedu.lk